# இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழா!!

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம். 1:1-11,

பதிலுரைப்பாடல்: திபா: 47: 1-2. 5-6, 7-8,

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4: 1-13,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 16:15-20

## திருப்பலி முன்னுரை:

இறைமகன் இயேசுவில் மிகவும் இனிமையானவர்களே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்ற விழா வாழ்த்துகளை மிக மகிழ்வோடு உரியதாக்கி மகிழ்கிறேன். திருத்தூதர் பணிகள் நூலில் இருந்து வாசிக்கப்படும் இன்றைய முதல் வாசகம், இயேசுவின் விண்ணேற்ற நிகழ்வை எடுத்துரைக்கிறது. தூய ஆவி வரும்வரை சீடர்கள் எருசலேமிலேயே தங்கியிருக்குமாறு இயேசு பணிப்பதையும், இயேசு இரண்டாம் முறையாக மீண்டும் வருவார் என்பதை வானதூதர் முன்னுரைப்பதையும் இங்கு காண்கிறோம். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு எப்பொழுதும் தயார் நிலையில் வாழும் வரம் வேண்டி இந்த வாசகத்தை கவனமுடன் செவியேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. எல்லாம் வல்லவராம் இறைவா,

உமது திருமகனின் உயிப்பு, விண்ணேற்றம் ஆகிய மறைபொருட்களின் அடிப்படையில் தோன்றி வளர்ந்த திருச்சபையின் நம்பிக்கை வாழ்வு சிறக்க பணியாற்றுமாறு, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் தேவையான ஞானத்தை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. விண்ணில் வாழ்பவராம் இறைவா,

இவ்வுலகின் சுகங்களை நாடி உம்மைப் புறக்கணித்து வாழும் மக்கள் அனைவரும், விண்ணக வாழ்வைப் பற்றி சிந்திக்கவும், நீர் காண்பித்த அன்பு வழியில் நடந்து விண்ணக வாழ்வை உரிமையாக்கிக்கொள்ளவும் உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. புதுமைகளின் நாயகராம் இறைவா,

பேய்களை ஓட்டவும் நோய்களை நீக்கவும் இறைமகன் இயேசு அளித்த அதிகாரம் எம்மில் செயல்படவும், எங்கள் நம்பிக்கையால் உலகெங்கும் நற்செய்தியைப் பறைசாற்றி, உமது அரசை நிறுவவும் ஆற்றல் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. எங்கள் தலைவராம் இறைவா,

எங்கள் பங்கு சமூகத்தில் இணைந்திருக்கும் எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவோடு ஒன்றித்து செயல்படும் உறுப்புகளாக வாழத் தேவையான அருளாதார நலன்களை கட்டளையிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. அனைவரினதும் நலனில் அக்கறை கொண்ட தந்தையே!

இன்று இத் திருப்பலியில் பங்கு கொள்ள முடியாமல் நோயுற்றிருப்போர், சிறைகளிலும், வதை முகாம்களிலும் இருப்போர், அகதிகள் முகாம்களில் இருப்போர், பல்வேறு வேலைத்தளங்களில் பணியாற்றுவோர், பயணம் செய்வோர் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்களும் இன்றைய நாளின் மகிழ்வையும், ஆசீரையும் பெற்று மகிழச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. மாவேந்தரான தந்தையே இறைவா!

எமது குடும்பங்கள் ஒவ்வொன்றும், தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொண்டு பிரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

7. அனைவருக்கும் வலுவூட்டும் தந்தையே இறைவா!

பல்வேறு துன்பங்களால் ஆட்கொள்ளப்பட்டு தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்று, நிறைவோடும், மகிழ்வோடும் வாழ்ந்திட அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.